**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.52 /2022**
**Depostition of witness of Plaintiff – P.W.1(கோகிலா )**
**26.04.2023**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

விராலிமலையச்சேர்ந்த ராமசாமி என்பரை தெரியுமா என்றால் பத்திரம் பதிவு செய்த சமயத்தில் தான் தெரியும். பிரதிவாதிதான் ராமசாமியை அழைத்து வந்தார். 31.10.2017 ம் தேதி பிரதிவாதியிடம் பணம் கொடுத்தேன். வழக்கறிஞர் வீரமணி அலுவலகத்தில் வைத்து பணத்தை கொடுத்தேன். 31.10.2017 ம் தேதியே பத்திரம் பதிவு செய்யப்பட்டது. அந்த பத்திரத்தில் ராமசாமி, எனது அம்மா நீலா மற்றும் பிரதிவாதியின் கணவர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். பிரதிவாதியின் ஊர் தேராவூர் ஆகும். பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் இடம் வாங்குவது சம்பந்தமாக பேசும்போது தான் தெரியும். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே நெருக்கமான பழக்கம் இல்லை. பிரதிவாதியிடம் இடம் பேசும்போது பிரதிவாதியும் அவரது கணவரும்தான் வீட்டில் இருந்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கறிஞரால் காட்டப்பட்ட நபரை யார் என்று தெரியாது என சாட்சி கூறுகிறார். ராமசாமியிடம் வரவு செலவு எதுவும் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. ராமசாமி மற்றும் பழனியம்மாள் ஆகியோரிடம் இருந்து கையெழுத்து மட்டும் போட்டு பூர்த்தி செய்யப்பட்டாத காசோலை மற்றும் கேட்பு கடனுறுதி சீட்டு வாங்கினேனா என்றால் இல்லை. பிரதிவாதி உமாமகேஸ்வரியை எனக்கு தெரியாது என்றும் ராமசாமி மற்றும் பழனியம்மாள் என்னிடம்வட்டிக்கு பணம் வாங்கியுள்ளார்கள் என்றும் அதற்காக பூர்த்தி செய்யப்படாத காசோலை மற்றும் கேட்பு கடனுறுதி சீட்டு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ரூ.20 மற்றும் ரூ.50 பத்திரங்களில் கையெழுத்து மட்டும் போட்டு பூர்த்தி செய்யாமல் என்னிடம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பழனியம்மாளின் அண்ணன் மனைவிதான் பிரதிவாதி உமாமகேஸ்வரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியை எனக்கு யார் என்று தெரியாது என்றும் பழனியம்மாள் மற்றும் ராமசாமி என்னிடம் கடன் வாங்கியுள்ளதால் பிரதிவாதியின் சொத்து பத்திரத்தை என்னிடம் கொடுத்து ரூ.5,00,000/– பணம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் நேரடியாக தாவா சொத்தை விலை பேசி முன் பணம் கொடுத்து வா.சா.ஆ.1 பத்திரம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. உமாமகேஸ்வரிக்கு எதிராக தவறுதலாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னிடம் கடன் வாங்கிய ராமசாமி மற்றும் பழனியம்மாள் என்னிடம் கொடுத்த பிரதிவாதியின் பத்திரத்தை வைத்து மோசடியாக வா.சா.ஆ.1 கிரையஒப்பந்தத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்பனை செய்வதாக பிரதிவாதி என்னிடம் நேரடியாக சொல்லவில்லை என்றும் பிரதிவாதி என்னிடம் முன் பணம் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரூ.500 கட்டுகளில் 10 கட்டு கொடுத்தேன். எதற்காக முழு கிரைய தொகையையும் கொடுக்காமல் ரூ.5,00,000/- மட்டும் கொடுத்து கிரைய ஒப்பந்தம் செய்தேன் என்றால் தாவா சொத்தை அளவை செய்து பட்டா மாறுதல் செய்வதற்கு கால அவகாசம் கேட்டதால் முழு தொகையும் கொடுத்து கிரைய பத்திரம் எழுதி கொள்ளவில்லை. கிரைய ஒப்பந்த தேதியில் இருந்து இரண்டு வருடத்திற்குள் மீதி தொகையை கொடுத்து கிரையம் செய்வதாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது. தாவா இடத்தை அளவை செய்து பட்டா மாறுதல் செய்தபிறகுதான் கிரைய பத்திரம் எழுதி கொள்ளவேண்டும் என்றும் வா.சா.ஆ.1 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**